**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT**

**MADURAI**

**O.S. NO. 381/2023 P.W.1**

| | |
|---|---|
| Name : திரு.பாலச்சந்திரன் | Father's Name: |
| Caste : | Religion: |
| Village : | Taluk: |
| Calling : | Age: |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.07.2025.

**வாதி தரப்பில் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது.**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலம் வா.சா.1 ன் சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது. **அதன் தொடர்ச்சியாக வா.சா.1 ன் முதல் விசாரணை** தாவா சொத்து 30.01.1986 ம் தேதி வெங்கடச்சாமி எழுதிவைத்த உயிலின்படி திலீபன்க்கு பாத்தியப்பட்டது. அந்த பதிவு செய்யப்பட்ட உயிலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி திலீபன் 14.01.2022 ம் தேதி இறந்துவிட்டார். அவரது இறப்புச்சான்றிதழின் ஆன்லைன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திலீபன்-ன் வாரிசு குறித்த ஆன்லைன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களது வங்கி கணக்கிலிருந்து திலீபன் கணக்குக்கு பண பரிவர்த்தனை செய்யப்பட்டது சம்பந்தமாக வங்கி ஆன்லைன் நகல் 4 ஐ தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 4 முதல் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடனின் ஒருபகுதிக்காக திலீபனும் அவரது தாயாரும் எனக்கு 18.02.2021 ம் தேதி பதிவு

செய்யப்பட்ட கிரைய பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளார். அதன் ஆன்லைன் நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான கிரையத்தொகையை திலீபன் செலுத்தவேண்டிய கடனிலிருந்து கழித்து கொண்டு எஞ்சிய தொகை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடனை கோரி 31.03.2023 ம் தேதி பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதை பிரதிவாதிகளுக்கு பதிவு தபாலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதுகள் 4 ஐ தாக்கல் செய்கிறேன். அவை வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்புகள் பிரதிவாதிகள் விலாசத்தில் சார்வு செய்யப்பட்டதற்கான 4 அஞ்சலக ஒப்புதல் அட்டைகளை தாக்கல் செய்கிறேன். அது அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** - இல்லை.

Sd/- பாலச்சந்திரன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.